ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2269/48 - 2022 මාර්තු මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.03.03
2269/48 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கத்தை கொண்ட விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டு சட்டம் 2 ஆம் பிரிவு மற்றும் 5 ஆம் பிரிவு ஆகியவற்றின் கீழான கட்டளை

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கத்தை கொண்ட விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான் இத்துடன் உள்ள அட்டவணையின் i ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வர்த்தகப் பண்டங்கள் சம்பந்தமாக அந்த அட்டவணையின் ii ஆம் நிரலில் உள்ள நேரொத்த குறிப்புகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதத்தின் அடிப்படையிலான விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டை அறவிட வேண்டும் இதன் மூலம் கட்டளையிடுகிறேன்.

**அட்டவணை**

| i ஆவது நிரல் | | | | ii ஆவது நிரல் |
|---|---|---|---|---|
| வர்த்தகப் பண்டம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விபரம் | |
| 1. | 10.05 | 1005.90 | பிற- சோளம் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 10/- |
| 2. | 10.07 | 1007.90 | பிற – தானிய சோளம் (சோளம்) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 10/- |

2. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கத்தை கொண்ட விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டு சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், மேலே உள்ள அட்டவணையின் மூலம் குறித்துரைக்கப்பட்டுள்ள சோளம் இறக்குமதிக்கு ஏற்புடையதான கிலோகிராம் ஒன்றுக்கான ரூபா 10 எனும் விசேட வர்த்தக பண்ட அறவீட்டிலிருந்து கிலோகிராம் ஒன்றுக்கான ரூபா 1 இனை அறவிட்டுக்கொண்டு, எஞ்சிய பெறுமதியை திரிபோஷா உற்பத்திக்காக ஸ்ரீலங்கா திரிபோசா லிமிடெட் நிறுவனத்திற்கு மாத்திரம் விலக்களித்தல் வேண்டும் என இதன் மூலம் கட்டளையிடுகிறேன்.

1A - PG 5771 — 485 (2022/03)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. இந்தக் கட்டளை 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்ற 06 மாத காலத்திற்கு 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கத்தை கொண்ட விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டு சட்டத்தின் 02 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

4. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கத்தை கொண்ட விசேட வரத்தகப் பண்ட அறவீட்டு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதிய 2228/3 ஆம் இலக்கத்தை கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் கோளம் (சுங்கக் குறியீட்டு இலக்கம் 1005.90) மற்றும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கத்தை கொண்ட விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டு சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆம் திகதி 2259/9 ஆம் இலக்கத்தை கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் வெளியிடப்பட்ட கட்டளையை 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆம் திகதி முதல் செயல் வலுப்பெறும் விதமாக இரத்து செய்கிறேன்.

**பசில் ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2022, மாச்சு 03.*

EOG *03-0750*